III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.560/2022

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 10-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : சுசீலா | Village | : |
| Father's / Husband's Name | : லேட்.பால்ராஜ் | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் தாக்கல் செய்திருக்கின்ற பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய சொத்தை எனக்கு வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன். 2 ஆம் பிரதிவாதி ஜஸ்டின் என்னுடைய இடத்தை எந்த ஒரு பிரதிபலனும் நான் பெறாமல் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார். அந்த இடம் எனக்கு வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன். எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியாது. நான் வேலை செய்த இடத்தில் எனக்கு கையெழுத்து மட்டும் போட கற்றுக் கொடுத்தார்கள். தாவா சொத்தை 2004 ல் ஜெயலட்சுமி அம்மாள் அவருடைய மகள்கள் சுசித்ரா, சரிதா ஆகியோரிடமிருந்து விலைக்கு வாங்கினேன். நான் வீட்டு வேலை பாத்து வந்தேன். ஒரு இடத்தில் எனக்கு 6000 ரூபாய் சம்பளமும் மற்றொரு இடத்தில் 5000 ரூபாய் சம்பளமும் கொடுத்தார்கள். அந்த சம்பளத்தை வைத்து அவர்களிடமே சீட்டு போட்டு சிறுகசிறுக சேர்த்து தாவா சொத்தை விலைக்கு வாங்கினேன். தாவா சொத்தை 2004 ல் வாங்கியது முதல் நானும் என்னுடைய அம்மாவும் அந்த சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகின்றோம். முதல் பிரதிவாதி முருகன் ஆட்டோ ஓட்டி வந்தார் அந்த வகையில் அவர் சர்ச்க்கு என்னுடைய தாயாரை கூட்டிச் சென்ற பொழுதும் மருத்துமனைக்கு கூட்டி செல்லும்பொழுதும் எங்களுடைய குடும்ப கதைகளை தெரிந்து வைத்திருந்தார். அவரை சர்ச்ல் வைத்து சன்டே ஒரு நாள் மட்டும் பார்ப்பேன். அப்படி தான் எனக்கு அவரை தெரியும். அவரை நான் எந்த சன்டேயில் பார்தேன் என்று வருடம் மாதம் தேதி சொல்லமுடியுமா என்றால் வாரம் வாரம் சன்டே அன்று சர்ச்ல்

வைத்து பார்ப்பேன். முதலாம் பிரதிவாதி முருகன் ஆட்டோகாரர் என்னும் வகையில் மட்டும் அவரை எனக்கு தெரியும். வேறு எந்த உறவு முறையும் கிடையாது. வழக்கை சொத்தை பொறுத்து 17.06.2013 அன்று நான் எனது தாயாருக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்தேன். அது வா.த.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டிருக்கின்றது. 2004 ல் நான் சொத்தை வாங்கும்பொழுது என்னை திருமணம் ஆகாதவர் என்று போட்டுவிட்டார்கள் அதனால் எனது தாயாருக்கு ஒரு பாதுகாப்பு செய்ய வேண்டும் என்பதற்காக எனது தாயார் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தேன். 2013 செட்டில்மெண்ட் பத்திரத்திலும் நான் திருமணம் ஆகாதவர் என்பதை காட்டும் படி பால்ராஜ் மகள் சுசீலா என்று தான் என்னை காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் ஆங்கிலத்தில் கையெழுத்துப்போட்டிருக்கின்றேன் என்றால் சரிதான். நான் ஆங்கிலத்திலும் தமிழிலும் கையெழுத்து போட கற்றுக்கொண்டேன். எனக்கு தமிழும் ஆங்கிலமும் எழுதப் படிக்க தெரியும் என்றாலும் இந்த வழக்கிற்காக தமிழ், ஆங்கிலம் எழுத, படிக்க தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 29.05.2014 ல் அதே சொத்தை என்னுடைய தாயார் எனது பெயருக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றாலும் அது வா.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டிருக்கின்றது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை. வா.த.சா.ஆ.3 பத்திரத்தில் பால்ராஜ்ன் மகளும் பி.முருகன் அவர்களுடைய மனைவி என்று எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தை என்னிடம் தரவில்லை முருகனின் மனைவி என்று போட்டிருப்பது எனக்கும் என்னுடைய அம்மாவிற்கும் தெரியாது. வா.த.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் சாட்சியாக பி.முருகன் கையெழுத்து போட்டிருக்கின்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் முருகனின் மனைவி என்பதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமே ஆகவில்லை. எனக்கு தெரியாமல் இந்த ஆவணத்தில் அவரது மனைவி என்று குறிப்பிட்டிருக்கின்றார். நான் முதல் பிரதிவாதி முருகனுடன் சேர்ந்து கொண்டு 2 ஆம் பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் A அட்டவணை சொத்து 1059 சதுரடி என்று சொல்லியிருக்கின்றேன் என்றாலும் B அட்டவணை சொத்தில் நான் குடியிருக்கின்றேன் என்று சொல்லியிருக்கின்றேன் என்றாலும் அதனால் B

அட்டவணை சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்று சொல்லமுடியுமா என்றால் என்னால் அது பற்றி சொல்ல முடியாது. நான் குடியிருக்கும் வீட்டில் எவ்வளவு பரப்பளவில் வீடு கட்டியிருக்கின்றேன் என்றால் அது பற்றி எல்லாம் எனக்கு சொல்ல தெரியாது. தோரயமாக 200 சதுர அடி தளம் போட்ட வீட்டில் இருப்பேனா என்றால் இது எனக்கு சொல்ல தெரியாது. 29.05.2014 ல் நான் 1 ஆம் பிரதிவாதிக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்தேன் என்றால் இது பற்றி எனக்கு சொல்ல தெரியாது. என்னிடம் காட்டப்படுகின்ற உயில் சாசனத்தில் உள்ள போட்டோவும் கைரேகையும் என்னுடையது தான் என்றால் திருமுல்லைவாயலில் இடம் வாங்கி தருவதாக சொல்லி என்னை அழைத்து சென்று போட்டோ ஒட்டி என்னிடம் கையெழுத்தும் கைரேகையும் வாங்கினார்கள். அந்த உயிலிலும் என்னை முருகனின் மனைவி என்று போடப்பட்டிருக்கின்றது என்றால் எத்தனை இடத்தில் போட்டிருந்தாலும் நான் முருகனின் மனைவி கிடையாது. அந்த உயிலில் என்னுடைய தாயார் முதலாவதாக சாட்சி கையொப்பம் போட்டிருக்கின்றார் என்றால் என்னுடைய தாயாருக்கு இது எல்லாம் தெரியாது. 2 பேர் சேர்ந்து என்னுடைய தாயாரை ரிஜிஸ்ட்டர் ஆபிசுக்கு தூக்கிட்டு போய் கையெழுத்து வாங்கினார்கள் எல்லாம் கரெக்டா பன்னியிருக்கோம் உங்கள் மகளை ஏமாற்றமாட்டோம் என்று கையெழுத்து வாங்கினார்கள். என்னுடைய தாயார் படுத்த படுக்கையாய் இருந்தால் கைரேகை மட்டும் தான் வைத்திருப்பார் என்றாலும் அவர் கையெழுத்து போட்டிருப்பதனால் நல்ல நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த உயிலிலும் ஆங்கிலத்தில் தான் கையெழுத்துப் போட்டிருக்கின்றேன் என்றால் சரிதான். நான் ஆங்கிலத்திலும் கையெழுத்துப்போடுவேன். என்னுடைய கையெழுத்தை பார்க்கும் பொழுது எனக்கு நன்கு படிப்பறிவு இருப்பதாக தெரியவருகின்றது என்றால் சரியல்ல. எல்லா விவரமும் தெரிந்துகொண்டு நான் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(அறிவார்ந்த 2 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).